REGD. No. M. 3712.

ஸ்ரீ:

ஸ்ரீமதேராமாநுஜாய நம:

# வகுளமாலை.

திருவல்லிக்கேணித் தமிழ்ச் சங்கத்தினின்று மாதந்தோறும் வெளிவரும்

ஒரு தமிழ்ப்பத்திரிகை.

“கண்ணன் கழலிணை
நண்ணும் மனமுடையீர்!
எண்ணும் திருநாமம்
திண்ணம் நாரணமே” — வகுளாபரணர்.

“அகரமுதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு”
“தனக்குவமை யில்லாதான்றாள் சேர்ந்தார்க்கல்லான்
மனக்கவலை மாற்றலரிது” — திருவள்ளுவர்.

“உலகம் யாவையுந் தாமுளவாக்கலும்
நிலைபெறுத்தலும் நீக்கலும் நீங்கலா
அலகிலா விளையாட்டுடையாரவர்
தலைவரன்னவர்க்கே சரணாங்களே” — கம்பர்.

தொகுதி 1. VOL. 1. } ஈசுவர வருஷம் சித்திரை மாதம். APRIL 1937. { பகுதி 4. No. 4.

## உள்ளுறை.

| | | | |
|---|---|---|---|
| 1. | சடகோப தத்துவம். | பத்திராசிரியர். | 57. |
| 2. | துண்டு துணுக்குகள். | பாரத்வாஜி. | 64. |
| 3. | கம்பர் திருநாட்கொண்டாட்டம். | காரியதரிசி. | 65. |
| 4. | தனிப்பாடல். | தமிழன்பன். | 80. |
| 5. | எதிராசரந்தாதி. | | A |

பத்திராசிரியர் :— ஆர். கேசவய்யங்கார், M.A.B.L., அட்வகேட்.

வருஷம் 1-க்கு ரூ. ஒன்று. ][ தனிப்பிரதி அணா ஒன்றரை.

# சௌத் இண்டியன் ஸ்டோர்ஸ்,

## திருவல்லிக்கேணி.

நேர்த்தியான மளிகை சாமான் நேராகத் தருவித்து செட்டு ரெம்பக்கம்மியாக்கி சீக்கிரத்தில் கொடுக்கிறோம். நேரிலே மின்சாரத்தில் வறுத்தரைத்த காப்பியும், கடைந்தெடுத்த கட்டியான வெண்ணையும் நறுமணத்த புத்துறுக்கு மேன்மையான நெய்யும், குழையாத பழவரிசி வியன்மிக்க வமுதாகும், சீக்கிரத்தில் மாவு போல் குழைந்து போகும் ருசியான பருப்பும், பார்த்தவரும் கேட்டவரும்பரிவுடனே வாங்கிடுவார். மிக்க புகழ் பெயர் பெற்ற பரிமளப் பாக்கு சீராக வுடைத்து உயர்ந்த நல்ல வாசனைச் சரக்கு நெய்யுடனே சேர்த்து வேண்டு மட்டும் விற்கிறோம். இக்கடையில் இடைவிடாது வாங்குவோர்க்கு இக்கட்டே இருக்காது. மிக்க பல முண்டாகும். நிரம்ப அறிவும் ஊறும்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# வகுளமாலை.

தொகுதி 1. Vol. 1. | ஈசுவர வருஷம் சித்திரை மாதம். APRIL 1937. | பகுதி 4 No. 4.

## சடகோபதத்துவம்.

அன்று முதலாரியர்களாதி யெனவோதிச்
சென்று பெறு மாறனடி சேருமுடிமன்னர்
என்றுமவரே தமிலரெம்மடிகளென்றே
ஒன்றியவரோது மறையோங்கிய துரைப்பாம்.

சேதநதத்துவத்துக்கு முடியாயும் பரதத்துவததுக்கு அடியாயும் நின்று ஆன்மாக்களைப் பரன் பொன்னடிப்பால் சந்தி செய்வித்து விளங்கும் தத்துவம் தான் "சடகோபன்" எனும் பாதுகத் தத்துவம் என்று கூறப்பட்டது. பரன் கருத்தால் சேதநதத்துவமென்றும், சேதநர்கருத்தால் பரதத்துவமென்றும் உணரப்படும் தத்துவமாதலான் இத்தத்துவத்துக்கு "மாறன்" எனும் திருநாமம் போர இயைந்தது. "விலக்ஷணன்" என்ற வடமொழி "மாறன்" எனச் செவ்விய தமிழாயது. சடகோபதத்துவம் கண்டே தான் மாதவனார் பரமபததத்துவத்திட்பம் தெளிவது. அத்தத்துவத்துக்கு மேல் என்னுற்றதென்றதை பரன் ஒருவனே அறிவன். அடியார்க்கு அருள் சுரந்து திருவுருவெடுத்துக் காட்சி அளித்து அறிவிப்பன். "த்வமேவ த்வாம் வேத்த" (நீர்ஒருவர்தான் உம்மை அறிவீர்) என்பர் பட்டர். அவன் தானுமே அறிவானோ அறியானோ என ஐய அணி கொண்டு இவ்வுண்மையையே மறை விளக்கிற்று என்று ஐயமற பட்டர் விளக்கியருளாநிற்பர். "பாதோஸ்ய விச்வாபூதாநி......ததோவிஷ்வங்வ்யக்ராமத்" என்று புருஷஸூக்தம்தானே உத்தமன் பேர் பாடி அவன் திருநாமமே பூண்டு நான் மறையும் தானே யாய் மிளிர்ந் தோங்கிவளரா நின்றது. ஸ்ரீபுருஷஸூக்தங்களையே "வேதப்புனித இருக்கு" என்று பணித்த ஆழ்வார் திருவுள்ளம் ஈண்டுத்தெளியவல்லது. பரனுடைய அம்ச

பூத்தர்களான சேதநரனைவரும் காணமுயல்வதும் கண்டுபெறுவதும்
புருடோத்தமன் திருவடி நிலைதான். அந்நிலை யெய்தியே சேதநர்
கள் தெய்வத்தன்மை பெறுவது. அந்நிலைபெறுத்தியே பரன் சேத
நர்களை த்தன்னை ஒப்பாராக்கி க்காத்து மகிழ்வது. பரன் சேதநர்களை
ஆட்கொள்ளும்படி ஈதே. சக்கரத்தண்ணல் திருவடிநிலை யுடைத்தலே
சேதநர்கள் பெறும் பெரும்பேறு. ஈதே திருவடி அடைவாம், இந்நிலை
யெய்தற்பொருட்டே அண்ணலருளால் ஆன்மாக்கள் ஆக்கை படை
த்தது. சேதநர்கள் தெய்வத்தன்மை அடையும்நிலைதான் பரன் திரு
வடி சூட்டும்நிலை அந்நிலையே சேதநர்கள் உயர்வுக்கு எல்லை. அந்
நிலையுற்றே பிறந்தார் உயர்ந்து மீளாது இன்புற்றுவாழ்ந்து விளங்கு
வது. அவ்வாறு விளங்கும் நாடே பரமபதம் எனும் திருநாடு.
"மாயை நீங்கி உயர்ந்தபதம் ஏறி உணர்ந்தொன்றினமே" என்று
தேசிகனார் இவ்வுண்மையை விளக்கியருளிய பாசுரம். அப்பதமடை
ந்தே பிறந்தார் உயர்வது. அஃதே சேதநதத்துவத்தின் உயர்வுக்கு
வரம்பு. ஈதே மறை உணர்த்தும் உண்மை. இவ்வுண்மை உணர்ந்
தார் கடவுளுக்குக்காலேது? கையேது? கண்ணேது? கருத்தேது?
ஆன்மாக்களனைவரும் பரமபதத்திலடங்க இடமுளதோ, இலதோ
என ஐயமெழுப்பார், தடையும் கூறார். இவ்வுண்மை விளக்கவே
பரன் திரிவிக்கிரமனாயது. பரன் எளிதாய அவதார நிலையிலே
யே மண்ணும்விண்ணும் அவன்சேவடிக்கண் ஓர்தூசாகி ஒடுங்கி
மறைந்ததென்றபோது, பரனாய்ப்பொலிந்துநிற்கும் அவன் பரமபத
த்தின் பெருமை எண்ணுவதெத்திறம்? "மண்ணும் விண்ணும் என்
காற்கு அளவின்மை காண்மின் என்பான்" என்று ஆழ்வார்தாமே
இவ்வுண்மையை விளக்கியருளினார். சேதநர்கள் உயர்வுக்கு வரம்
பென நிற்குமதே பரன் திருவடியாம். அத்திருவடியை "விஷ்ணோ:
பரமம்பதம்" என்றும் 'அத்வந:பாரம்' என்றும் உபநிடதம் முழங்
கும். சேதநத்துவத்துக்குப்பாரம்' (எல்லை)பரத்துவத்துக்குப் 'பதம்'
'பாதமூலம்' (காற்கடை) என்பர் ஆளவந்தார். அப்பதம் உடைய
வனே விஷ்ணு' எனும் பரமன். பிரமமாய விஷ்ணுவை 'பரமன்'
என்னாது அவன் 'பதத்தையே' 'பரமம்' என்று உபநிடதம் போற்
றிப்பாடும்பான்மை சடகோபதத்துவம் கண்டே உய்த்தறியற்பாற்றாம்.
பரமனடிபாடுதலே பரமனைப்பாடுதலாம். இருமாமறைகளும் பாடு
வது பரமனடியையேதான். வேதங்கள்தாமே காட்சிபழுகிக்கிடந்
தெழுந்துயர்த்தோங்குவது பரனடியிடையே தானென்றால் அதற்கு

மேல் யாருமறியார் என்றது பெறப்பட்டது. பரன் திருவடித் தத்துவமே பரதத்துவம் என்றதே மறையுள்ளம் கண்டார் துணிபு. பரன் திருவடிக்கீழமர்ந்தே பரனை ஒக்கும் நிலை அடைவது. அஃதே சேதநர்கள் ப்ரஹ்மபாவம் அடையும் நிலை. அஃதே பரமபதமடைதலாம். அந்நிலையடைந்தே என்றுமே மீளாது பரிபூர்ணப்ரஹ்மாநுபவம் எனும் ஈறிலின்பவெள்ளத்தில் அப்பொழுதைக்கப்பொழுது என்னாராவமுதமே என மூழ்குவது. பரனுக்கு சேஷனாய ஆநந்தமே முக்தனுடைய ஆநந்தம். முக்தனுக்கு சேஷியாய ஆநந்தமே பரனுடைய ஆநந்தம். இவ்வாநந்தம் பொதிந்து நின்ற நிலையே பரன் திருவடி நிலை. அந்நிலையே சேஷன் சேஷிபால் ஒருப்படும் நிலை. அந்நிலையே சமன் செய்விக்கும் நிலை. பரனும் முக்தனும் கலந்தின்புறுவதும், நித்தரும் முக்தரும் திரண்டு பரன்திருவடிக்கண் இன்புறுவதும், அவர்களும் ஒருவரைஒருவர் கலந்தின்புறுவதும் அந்நிலையிடையேதான். இவ்வாற்றால் அவ்வனைவரின்பமும் ஒக்கும் என்ற மெய்ம்மைதான் அவ்வுலகுளனும் பரமபதத்தில் பெருகும் இன்பவெள்ளத்தின் மெய்ம்மை. இவ்வாறு சேஷசேஷிபாவம் ஒருங்கி விளங்குதல் தான் ஒருமை. இவ்வுண்மை விளக்கும் நிலையே பரன் திருவடிநிலை. இந்நிலையின் உண்மை விளக்கவே வாச்சியனாய பரனும் அவதரிக்கிறான். வாசகனாய வேதபுருஷனும் அவதரிக்கிறான். காக்க அவன் அவதரிக்கிறான். காப்பின் உண்மையை விளக்க வேதம் அவதரிக்கிறது. கல்லிடையும், கடலிடையும், தூணிடையும் விசும்பிடையும் அவன் அவதரிப்பான். வான்மீகி, வ்யாஸ, பராசராதிகள் நாவிடையே வடமொழியாயும், பராங்குச பரகாலாதிகள் நாவிடையே தென்மொழியாயும் ஒளிவிசும்பே ஒலி செய்யும் தொன்மறையே அவதரிக்கும் "காத்து அடியார்களைக்கொண்டு போய், தன்மைபெறுத்தித்தன தாளிணைக்கீழ்க் கொள்ளும் பரமன்," என்று தமிழ்மறைகாப்புவிரிக்கும்பான்மை பின்னர் விளக்குவாம். வேதம் அவதரித்து மாறனடிமெய்ம்மை விளக்கியபடி ஈண்டுவிரிப்பாம்.

வேதபுருஷன் திருமுடி தாங்குமதே அண்ணல் திருவடியாம் என்று பராசரபகவான் மறைமுடிகண்டபடி. "பாதேஷு வேதாஸ் தவ" என்று நான்குமறைகளும் ஞானப்பிரான் நான்குதிருவடிகளாய் விளங்குகின்றன என்று பரதேவதையின் மெய்ம்மைவிளக்கத்தோன்றிய இம்மாமுனிவர் விளக்கிய மறைமுடிஉண்மை. வேத

மனைத்தும் தம்முடிச்சுடர்கொண்டு விளக்குவது ஞானப்பிரான டிச்சோதிதான் என்றமையால் இம்மாமுனிவர் பரதத்துவத்துக்கும் பரனடித்தத்துவத்துக்கும் வாசிகாணுதே பரதத்துவத்தின் உண்மை தெளிந்தார். உபநிடதம் உணர்த்திப்பெறுத்தும் ப்ரஹ்மம் என்றது ப்ரஹ்மத்தின் திருவடி என்றதே பராசரர் கண்டுதுணிந்தது. "யத்வைபச்யந்திஸூரய:... ச்ருதிவாக்யோதிதம்ஸூக்ஷ்மம்தத் விஷ்ணோ: பரமம்பதம் ததேவபகவத்வாச்யம்..." என்றிவாறுதியிட்ட வாறே இவருமோர்பகவானுயினர். பகவானுக்கும் பகவானுடைய திருப்பாதத்துக்கும் வாசிகாணுதவரே பராசரபகவான். இப்பகவர் கோமான் திருவுள்ளம்கண்டே "யந்மூர்த்நிமேச்ருதிசிரஸ்ஸுசபாதி யஸ்மிந் அஸ்மந்மநோரதபதஸ்ஸகல:ஸமேதி" என்று ஆளவந்தார் ஸமந்வயாதிகரண மெய்ம்மையை விளக்கியருளினர்.

இனி, பகவான் திருப்பாதத்துக்கும் பகவான் திருப்பாதுகத்துக்கும் வாசிகாணுதவரே வான்மீகிபகவான். இத்தகையமறை முடிக்காட்சிகண்ட இவரிடத்தே "கவி"; "ஆதிகவி" எனும் சொற்கள் இயைந்து நிலைபெற்றன. ஈதே இவர் பரம்பொருளை "உந்நயநம்" செய்து ஆதிகவியானபடி. "அநுஷ்டுப்" கண்டபடி. "வாங்கரும் பாதம்நான்கும்வகுத்த"படி. பரன்பாதுகம் இலக்கியமாயே பாதமும் நான்காகி விருத்தமும் 'அநுஷ்டுப்' ஆகியது. பாதுகம் புனைந்தபரனடிச்சோதிவெள்ளத்தில் மூழ்கிய இக்கவிஞர்பெருமான் கண்டமறையே இராமாயணம். இவ்வருமறைகண்டமையான் இம்முனிவரை அம்மறைதானே "வால்மீகி:பகவாந்ரிஷி:" என்று பகவானெனப் புகழ்ந்துபோந்தது. பாதுகம்கண்டநிலை இராமாயணம். அத்திருமணிப்பாதுகமே அவதரித்து இன்னிசை ஒலித்தநிலை திருவாய்மொழி. இராமாயணமெனும் சங்கதப்பாதுகமறைநூற்கவே நோற்ற "தவசி" யாவர்வான்மீகிஎன்பார். அடியார்க்கு இன்பமாரியேயாம் திருவாய்மொழிஎனும் வண்தமிழ்மறைநூற்கவே நோற்றவர் அப்பாதுகமேயாய ஆழ்வார் என்பார். இராமாயணத்துக்கும் திருவாய்மொழிக்கும் தலைவன் ஒருவனே. அவனே உபநிடதப்புருடோத்தமன். அவனை "மாநிஷாதன்"என்பர் வான்மீகி. "அலர்மேல் மங்கையுறைமார்பன்" என்பர் ஆழ்வார். "இராமபிரான்" என்றது அவன் திருநாமம். இருவரும் கற்றது இராமபிரானையே. "பாவோநாந்யத்ர கச்சதி" என்பர் வான்மீகி. "கற்பாரிராமபிரானையல்லால் மற்றும் கற்பரோ"என்பர் ஆழ்வார். அப்பிரான் திருவடிநிலைகளால்

நின்ற இரண்டு தத்துவங்கள் அவனோடொக்கப்பரதத்து வமென் விளங்குமாறு இருதிருத்தம்பிகளாய்த்தோன்றின. அவர்களே இராமனுக்கு "அநுச"ர்கள். (பின்பிறந்தார்கள்) "அநுச" என்னும் சொல்லுக்கு வ்யாகரணம் நன்குகந்த பொருள் ஈதே. இவ்விருவரும் நின்றநிலை தான் சடகோபன் எனும் ஆழ்வார் ஒரொருவராய் நின்ற நிலை. இரு இராமாநுசர்கள் திரண்டநிலையே ஓர் ஆழ்வார் எனும் நிலை. திரண்டோங்கிச்சிறந்தநிலைஎன்பர் தேசிகனார். பரனான இராமபிரான் கோல்நெறிகாப்பதில் அவ்விருவரையும் சடகோபன் மிகுந்துநின்ற தால் இவரைஒப்பார் என்னாது மிக்கார் என்றார். முடிசூடுக என்ற பரன் ஆணையை பரதாழ்வான் சிறிதுதவிர்ந்தார்போலும். நாடுநோக்கி மீளுக என்ற பரன் ஆணையை இளையபெருமாள் சற்றுக்கடந்தார் போலும். தன்கருத்து சிறிதும் கலசாது பரன்கருத்தை வடிவெடுத் தாற்போல் பொலிந்துநின்ற பரன் திருப்பாதுகமான ஆழ்வாரோ என்னில் நாடும்மீண்டார், முடியும்சூடிக்கொண்டார். ஆக இருஇராமாநுசர்களை ஓர்சடகோபன் வென்றார் என்று வேதாந்தகுரு விளக்கியருளினர். இதன் கருத்து :—வேதம்எனும் இராமபிரான் திருத்திகிரியை அவன் ஒப்பவே அவனைஒக்க உருட்டுவிப்பதில் சடகோபனை ஒப்பாரும் மிக்காருமிலர் என்றதே மறைச்சிரத்தேசிகனார் பணித்த இப்பாதுகாஸஹஸ்ரப்பாசுரத்தின் ஆழ்ந்தகருத்து. ஒழிவில் காலமெல்லாமுடனாய்மன்னி வழுவிலாவடிமையே செய்யுமியல் பினரான ஒரொருவரிவ்வாழ்வாரே என்றதைநங்குருமணி இவ்வாறு கண்கூடாகக்காட்டித்தந்தபடி. ஆகவே, நம்மாழ்வார் ஒருவரே வேதம் தமிழ்செய்யவல்லராயினர். ஏனையமறைமுனிவரனைவரும் வேதம் காணவே வல்லார்கள், வேதம் தமிழ் செய்யகில்லார்கள். பரத்துவம் இராமபிரானாயதுபோல் அவனிருதிருவடித்தத்துவமும் ஓர்சடகோபனும் ஆழ்வாராயது. நாதன்பாதுகம் சூடிய பரதாழ்வானுக்கே தொண்டுபூண்டு அன்றில் வேறுபட்ட நாதனை அறியாதே விளங்கிய அரியஓர் தத்துவம்தான் சத்துருக்கினாழ்வான் என்பார் பரதனுக்கு சத்துருக்கினன் போல் ஆழ்வார்க்கு மதுரகவியாராம் சத்துருக்கின மதுரகவித்தத்துவங்கள் ஒன்றும் என்றதை ஈண்டுத்தெளிக. திருவடித்தத்துவத்தையும், திருவடிநிலைத் தத்துவத்தையும், திருவடிநிலைக்கே தொண்டுபூண்டு ஒன்றிஒருப் படும் பெரும்பேற்றையும் உலகுக்கு விளக்கியருளவே பரன் தானே யாயும் தன்திருத்தம்பிகளாயாயுமே அவதரித்தான் என்பதை விளக்

கவே வேதம் இராமாயணமாய் அவதரித்தது. "மநுஜத்வதிரோஹிதேநசக்யேவபுஷைகேநவிரோதிநாம்நிராஸே| அபஜத்பரதாதிபேதம் ஈச:ஸ்வயமாராதயிதும் பதாவநித்வாம்||" என்ற பாதுகாஸஹஸ்ரப்பாசுரத்தின் ஆழ்கருத்தில் ஆழ்வார்களே தமிழ்வேதமறிந்த பகவர்எனும் சொல்லுக்கு இலக்காவர். வாச்சியங்களான இந்நான்கு மூர்த்திகளுக்கும் பிரமசூத்திர அத்தியாயங்கள் நான்கும் முறையே வாசகங்களாக விளங்கும் என்றது உபநிடதர் மரபாம். திருமுடியிற் பாதுகம் சூடிய பரதாழ்வானுக்கும், திருவடியிற் பாதுகம் புனைந்த நாதனுக்கும் வேதம்வல்லார் வாசி காணகில்லார் என்றதே இராமாயணத்தின் உட்கருத்து. பொலிந்து நின்றது நாதன்பாதுகமாகலான அது பூக்கும் இணையடிப்போதராய இராமபிரானுக்கும் அதுகாக்கும் சென்னியராய பரதாழ்வனுக்கும் வாசியாம் காணேம் என்று மெய்ந்நாப்போதரான வான்மீகி பகவான் "ராமேவாபரதேவாஹம் விசேஷம் நோபலக்ஷயே" என்று தம்திருவுள்ளத்தைப்பாதுகம் பூண்ட பரதனை ஈன்ற கைகேசியாய்ப் பேசினர். நாதன் திருப்பாதுகமே நாதன் திருப்பாதமாம் என்றதே எமது துணிபு என்று வான்மீகிபகவான் பரதாழ்வானையே "ச்த்த்ரம் தாரய தக்ஷிப்ரம் ஆர்யபாதேள இமேள மதேள"| என்று சிங்கவொலி செய்து தமதரியமதத்தை வெளியிட்டருளினர். பதம் கேட்ட பரதனுக்குப் பாதுகமே அளித்த பரன் திருவுள்ளத்தை வான்மீகிபகவான் தர்மவீர்யத்தால் கண்டு தாம் கண்டவாறே உபநிடதஉட்பொருளை நன்குவிளக்கியருளினர். "பரதனுக்குப்பாதுகமுமரசுமீந்து" என்ற குலசேகரப்பெருமாள் திருவுள்ளமீதே. இவ்வரியமறைப்பொருளனைத்தையும் ஒருங்கே திரட்டும் " மூர்த்நாததாநாம்மணிபாதுகே த்வாம்உத்தம்வஸிதம் வா புருஷம் பவத்யா|வதந்தி கேசித்வயமாமநாம: த்வாமேவ ஸாக்ஷாத் அதிதைவதம் ந:||என்ற இப்பாதுகாஸஹஸ்ரப்பாசுரம் "தேவுமற்றறியேன்" என்றதின் மெய்ப்பொருளைச் செம்பொருளாக்கி மறைகட்கெல்லாம் ஓர்முடியணியாய் விள்ங்காநிற்கும்.பாதத்துக்கும் பாதுகத்துக்கும் வாசியில்லைகாண் என்று வான்மீகிச்சிங்கம் முழங்கியவாறே "தத்விஷ்ணே: பரமம்பதம்" என்ற பரன் திருவடிமறையே "தத்விஷ்ணோ:பரமம் பதத்ரயுகளம் த்ரய்யந்தபர்யந்தகம் சிந்தாதீதவிபூதிகம் விதாது ச்ரேயாம்ஸி பூயாம்ஸிந:"||என்ற பரன்திருப்பாதுகமறையாமே அப்பாதுகத்துக்கு "ஸஹஜகவீச்வர"ரான கவிதார்க்கிகச்சீரியசிங்க

முகத்தே வீரியம் பரந்து விண்ணளவும் எதிரொலித்துப்பொலியா நின்றது. பாதுகம் முடிசூடாதவரை தான்முடிசூடிக்கொள்ளான். பாதுகத்தொண்டராகாதவரை தனக்குத் தொண்டராகார் என்ற பரன் திருவுள்ளம்கண்ட வான்மீகிபகவான் கவிகட்கெல்லாம் கடவுளர்பினர். உலகனைத்தையும் ஆண்டுகாப்பது நாதன்பாதுகமே.அப்பன்பாதுகமே பொற்பாதுகம். ப்ராபகமும் ப்ராப்யமும் அப்பாதுகமே. "ஹேமபூஷிதே" என்றதால் தத்துவமும், யோகக்ஷேமம் விதாஸ்யத; என்றதால் உபாயபுருஷார்த்தங்களும்பரன்பாதுகம்தானென்றுவான்மீகி மறைப்பொருள் தெளிந்தபடி.' என்று பாதுகாஸஹஸ்ரம் தெளிவிக்கும். "பாதுகேஹேமபூஷிதே" என்றதே "மேவினேனவன் பொன்னடிமெய்ம்மையே' என்றதற்கு மூலம். "மதுமயபணிதிநாம் மார்க்கதர்சீ மஹர்ஷி:" என்று வான்மீகி பெயர்பெற்றார்.அன்னார் மதுரத்திருவுள்ளம்கண்டு சடகோபன்பொன்னடிமெய்ம்மைபாடும் தெய்வமாக்கவிஞரே மதுரகவி" என்று பெயர்பெற்றனர். பரன் பாதுகத்துக்காளுரியனவதே உலகுபெறும் நன்மை. இந்நன்மையால் மிக்காரே நான் மறையாளராவர். அவரே உலகாளப்பிறந்தவர். தன் திருப்பாதுகம் பெற்ற பரதாழ்வானே உலகனைத்தும் ஆளப் பிறந்தான் என்று உலகாளும் பரனே உள்ளமுவந்து போரமுழங்கினன். "பரதாக்ஞாம் புரஸ்க்ருத்ய"என்றும், "தஸ்யதர்மக்ருதாதேசா வயமப்யே ச பார்த்திவா:||" என்றம் பரன்தானே தன்னைப்பாதுகவயத்தனெனக்கருதினன். பரன் தன்திருவடிநிலைமெய்ம்மையை த்தானே விளக்கியருளிய இந்நீர்மை எத்திறம் என்றதே சாலப்பொருந்தும். ஆக,பாதுகமே 'அதிதைவதம்.'உலகனைத்தும்அப்பன்பாதுகத்துக்கே அதீநம்.' இம்மறைமுடி உண்மை கண்டாரே வான்மீகி என்பார். தத்துவமும், சந்தியும், பேறுமாய் ஒருங்கே திரண்டுபொலிந்து நின்றது சடகோபன் எனும் நாதன்திருப்பாதுகமே என்று காட்டித்தந்தாரேமறைமுடிக்குரு என்பார்."யோகக்ஷேமம்ஸகலஜகதாம்த்வய்யதீநம்ஸஜாதந்"என்றும், 'யதத்வரபுஜாம் சிர: பதயுகம் ச ரங்கேசிது: த்ருடம் கடயிதும் க்ஷமம் பவதி சேஷசேஷித்வத:'||என்றும் மூர்த்நாஸதாம் அதஸ்தாத் உபரி ச விஷ்ணோ: பதேந ஸங்கடிதாம் அதவியவீம்விமுக்தே: பதவீமவயந்தி பாதுகே பவதீம்||" (இதன்பொருள்:- அடியார்முடியேபாதுகத்துக்கு அடி. அப்பனடியேபாதுகத்துக்கு முடி. இவ்வாறுகீழ்நின்றஅடியார்முடியும்மேலுற்றஅண்ணலடியும் தன்னிடையேசந்திசெய்து ஒன்றுமாறுவிளங்கும் பாதுகம்நின்ற

நிலையேமோக்கநெறிகாக்கும்நிலை—என்றவாறு). என்றும் பலபுடைகளில் பாதுகாஸஹஸ்ரம் இச்சந்நிதத்துவத்தின் சிறப்பைப் பரக்க நிரூபிக்கும். இத்தத்துவமே வான்மீகிசிறப்பித்தது. ஈதே மாறன் சடகோபனெனும் தத்துவம். வான்மீகிசிறப்பித்த அப்பாதுகம்தான் இவ்வாழ்வார் என்றதை:— "பாதுகாத்மா சடகோப:ஸ்வயமே மாநநீய:" என்றும், "சடாரிபுதநோ: நிஷ்பதந்தீமுகாத்தே" என்றும் "வகுளதரதநுஸ்தவம் ஸம்ஹி தாம்யாமபச்ய:" என்றும், நிகமாந்த மஹாதேசிகன் அறுதியிட்டருளினர். பகவத்பாதுகாத்மாவான ஆழ்வார் அவதாரரஹஸ்யத்தை விளக்கவே சந்தமிகுதமிழ்மறைத்தேசிகனர் செந்நாவிடையே பாதுகாஸஹஸ்ரம் எனும் அரியஸம்ஹிதை அவதரித்தது. ஈதே பாதுகாஸஹஸ்ராவதாரரஹஸ்யம். ஈதேமறைமுடியோங்கியபடி.

ஏறுபுற்றுவந்ததீர்த்தனேமமுச்சுகந்தநா
நாறுபாதமாதிமார்பநாதனதுபாதுகம்
சேருமாறமேவுமாறனேவுபாதுகாயிரச்
சாறுபாடுபாடுவார்க்குமாறுயாவராவரே.

மாதவன்பொன்னார்பாதமாமறைப்பாதம்பூக்கும்
மாதவச்செல்வமிக்கஆதியம்புலமைச்செந்நா
நாதவீறுயர்த்தநாதன்பாதுகையாயிரத்தான்
வேதமாமுடி விளக்கும் வீதியாம் விளக்கினேமே.

பத்திராசிரியர்.

# துண்டு துணுக்குகள்.

அமலனாவான் ஆதிநாயகன். ஆதிபகவனே வள்ளுவர் கடவுள். இரக்கமுடைமை இம்பர் விதியே. ஈதல் என்பது ஈசனடிக்கே. உந்திக்கமலன் உத்தமனமலன். ஊடுதலன்றே காமத்துக்கின்பம். எங்குமுளன் கண்ணனென்பது எம்மவர் கூற்று. ஏரார்ந்த கண்ணனே யசோதை இளஞ்சிங்கம். ஐயந்திரிபற அனைத்தையும் கற்க. ஒத்தாருமிக்காருமிலாதவன் எம்மாயன். ஓத்தின் பொருளுணர்தல் உத்தமர் மரபு. ஔவியமவித்துயர்ந்தான் அகலிகை மணாளன்.

* * *

கற்பென்பதுவே காரிகைக்கணிகலம். காற்குங்கடவுள்தான் கமலைமணாளன். கிருபாநிதியன் கிருட்டிணன் என்ப. கீர்த்தியுடைமையே யாம் வேண்டுவது. குருபதம் பணிந்து குற்றந்தவிர். கூனியின்றேல் சரிதம் உண்டோ? கெடுவானன்றே கேடு நினைப்பான். கேடில் விழுச்செல்வம் கல்வியேயன்றோ? கைகேயி தனயன் பாதுகம் பூண்டான். கொக்கென்றிருப்பர் நம்மாசிரியர். கோதையின் சீர்த்தி உரைக்கற்பாலதோ? கௌதமன் சிறந்த ராமபக்தன்.

பாரத்வாஜி.

# திருவல்லிக்கேணித் தமிழ்ச்சங்கம்.

## கம்பர் திருநாட்கொண்டாட்டம்.

திருவல்லிக்கேணித் தமிழ்ச் சங்கத்தின் மூன்றாவது கம்பர் திருநாட்கொண்டாட்டம் 1937ஆம் மார்ச் மாதம் 26உ வெள்ளிக்கிழமை மாலை 3-30 மணிக்கு திருவல்லிக்கேணி தெள்ளியசிங்கப் பெருமாள் கோயில் தெருவிலுள்ள தவன உத்ஸவ பங்களாவில் மிகச்சிறப்பாக ஆரம்பமாகியது. பங்களாவின் முன்பக்கத்திருந்த பந்தல் மாவிலைத்தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. அழகிய படங்கள் உள்ளும் புறமும் அலங்கரித்து நின்றன. திருநாள் தொடங்குவதற்கு முன்னமே சென்னையின் பல பாகங்களிலிருந்தும் வெளியூர்களிலிருந்தும் வந்த தமிழபிமானிகள் நிறைந்திருந்தனர். மேடையிலும், படிகளிலும், மணல் பரப்பியிருந்த தரையிலும் பண்டித கன தனவான்கள் அமைதியாக அமர்ந்திருந்தனர். வந்தவர்களைச் சங்கத்தலைவரும், காரியதரிசியும் முறைப்படி வரவேற்றனர். வந்திருந்தவர்களிற்றலைபாயார் சிலரைக்கூறுதும்.

### விஜயஞ் செய்த பிரமுகர்கள்.

கனம் ஜஸ்டிஸ் யஸ். வரதாச்சாரியார், கனம் ஜஸ்டிஸ் லக்ஷ்மணராவ், திவான் பகதூர் வி. பாஷ்யம் ஐயங்கார், திருப்புகழ்மணி டி. எம். கிருஷ்ணஸ்வாமி ஐயர், ஸ்ரீமான்கள் யம். சுதர்சனமய்யங்கார், ஆர். ராமஸ்வாமி ஐயங்கார், கிருஷ்ணராவ் பான்ஸ்லே, வி. பி. சுந்தர்சேகர், தேவகோட்டை கே. திருவேங்கடத்தையங்கார், சீர்காழி சுந்தராச்சாரியார், டி. யன். யஸ். ராகவாச்சாரியார், மஹாமஹோபாத்யாய தாக்ஷிணாத்ய கலாநிதி டாக்டர் வி. சாமிநாதையர், பிரசங்க பூஷண வசிஷ்ட பாரதி, வித்வான் மு. ராகவய்யங்கார், வை. மு. கோபாலகிருஷ்ணமாச்சாரியார், ஸ்ரீரங்கம் ச்டகோபாச்சாரியார், பண்டித திருவாலி ராமாநுஜாச்சாரியார், டாக்டர் வி. ராமய்யங்கார், யஸ். ஆர். ரங்கநாதய்யர், கே. யஸ். விஸ்வநாத சாஸ்திரியார், டி. ஜி. ஆராவமுதய்யங்கார், ஆரணி சுப்பராவ், வி. யம். ஷண்முகசுந்தர முதலியார், யஸ். குமாரசாமி செட்டியார் முதலியோர்.

## கடவுள் வாழ்த்து.

காரியதரிசி கடவுள் வாழ்த்தாக "உலகம் யாவையும்" என்ற கம்பர் பாடலையும், "ஆராதவருளமுதம் பொதிந்த கோயில்" என்ற தேசிகனுர் பாசுரத்தையும் பாடினுர். 'கோயில்' என்ற சொல் கேட்குந்தோறும் டாக்டர் சாமிநாதய்யர் மகிழ்ச்சி தெரிவித்தார்.

சங்கத்தலைவர் ஸ்ரீமான் ஆர். கேசவய்யங்காரவர்கள், சென்னைப் பிரபுக்கள் சட்டசபை அங்கத்தினருள் ஒருவரும், மதுரைத்தமிழ்ச் சங்கத்து உப அக்கிராஸநாதிபதியும் ஆகிய மதுரை அட்வொகேட் ஸ்ரீமாந் டி. ஸி. ஸ்ரீநிவாஸய்யங்காரவர்களுக்கு அடியிற்கண்ட உபசார பத்திரத்தை வாசித்துக்கொடுத்து அன்றைை திருவல்லிக் கேணித் தமிழ்ச்சங்கத்து மூன்ரும் ஆண்டுக் கம்பர் திருவிழாவில் தலைமை வஹிக்குமாறு வேண்டிக்கொண்டார்.

## உபசார பத்திரம்.

பண்ணுர் மதுரைத் தமிழ்ச்சங்கம்
பாதுகாப்போய் வருக உயர்
எண்ணுர் கம்பர் கவிநயத்தை
யினிது விரிப்போய் வருக பெருந்
தண்ணுர் அறிவால் தமிழ் நாடு
தாங்குந்தலைவா வருக மதித்
திண்ணுர் சீனிவாசப் பேர்ச்
செம்மால் வருக வருகவே.

செந்தமிழ் நாடு பெற்ற அந்தணச் செல்வமே! இத்திருவல்லிக் கேணித் தமிழ்ச்சங்கத்தார் நடத்திவரும் கம்பர்திருவிழாவின் மூன்ரும் ஆண்டு விழாத்தலைமையை எங்கள் விருப்பிற்கிணங்கித் தாங்கள் வஹிக்க எழுந்தருளியது எங்கள் பெரும்பேறேயாகும். தாங்கள் நம் தமிழ் நாட்டுக்குப் புரிந்துவரும் பேருதவிகள் பல திறைப்பட்டனவாகும். தங்கள் லௌகிகப்பேரறிவாலும், வாக்கு வன்மையாலும், சட்டசபை மூலமாகவும், பிறவாயிலாகவும், தமிழ் நாட்டாரது முன்னேற்றங்கருதித் தாங்கள் அரும் பாடுபட்டு வருவதை

யார் தாம் அறியாதவர்? ஜநஸமூஹ நன்மையை நாடித் தாங்கள் உழைக்கத் தொடங்குவதற்கு நெடுங்காலத்துக்கு முன்பே தமிழ்ப்பாஷையின் முன்னேற்றத்தை நாடி உழைத்து வருபவர்கள் தாங்கள் என்பதைத் தமிழ் நாடு நன்ருக அறியும். தமிழின் விளைவிடமான மதுரைமாநகரில் 36-வருஷங்களாக நடைபெறும் மதுரைத் தமிழ்ச்சங்கத்துக்கு உபஅக்ராஸநராகத் தாங்கள் வீற்றிருந்து அச்சங்கத்தின் செவிலித் தாய்போல் நின்று அதனைக் கண்ணுங்கருத்துமாய் வளர்த்து வருகின்றீர்கள். அச்சங்கத்துப் பண்டிதர்களேயன்றி தமிழ் நாட்டிற் சிறந்த பண்டிதர்க்கெல்லாம் பேருதவி புரிந்து ஆதரித்து வருகின்றீர்கள். செந்தமிழ் நூல்கள் பல வெளிவருதற்குக் காரணபூதராய் விளங்குகின்றீர்கள். கவிச்சக்ரவர்த்தியாகிய கம்பநாடரிடம் தாங்கள் வைத்துள்ள மதிப்பும் அருமைப்பாடும் பெரிது என்பது தங்கள் உபந்யாஸங்களாலும் வாய்மொழிகளாலும் நாங்கள் நன்கறிவோம். இத்தகைய தாங்கள் இவ்வாண்டுக் கம்பர் திருவிழாவைத் தலைமை வகித்துச் சிறப்பிக்கவேண்டும் என்று விரும்பிய எங்கள் மநோரதத்தை நிறைவேற்ற உகந்து இங்கு எழுந்தருளியது பற்றி நாங்கள் கொண்டுள்ள மகிழ்ச்சிக்கு அளவில்லை. தங்கள் வரவு நல்வரவாகுக. செந்தமிழும், கவிச்சக்ரவர்த்தியின் அருமை பெருமைகளும், சிறந்தோங்குக. சுபம்.

திருவல்லிக்கேணித் தமிழ்ச் சங்கத்தார்.

ஸ்ரீமான் அட்வகேட் வி. நரஸிம்மாச்சாரியாரவர்கள் (சங்க உபதலைவர்) பிரேரணையை ஆமோதித்து ஸ்ரீமான் சீனிவாஸய்யங்காரவர்களைத் தலைமை வஹிக்குமாறு கேட்டுக்கொண்டார். தாக்ஷிணாத்ய கலாநிதி டாக்டர் சாமிநாதையரவர்கள் இதனை அநுஸரித்துப் பேசுகையில் நெடுநாட்களாக ஐயங்காரவர்களுடன் பழகும் பாக்கியம் தனக்குண்டென்றும், தமிழையும் தமிழ்ப் பண்டிதர்களையும் போற்றுவதில் அவர்கட்கு சமானம் வேறொருவரில்லை என்றும், அதற்குத்தானே சாட்சியென்றும், தனக்கு ஒரு காலத்தில் ஐயாயிரம் ரூபாய் சம்மானம் கிடைக்குமாறு செய்த பெருந்தகையாளரென்றும், கல்வியிற்பெரிய கம்பர் தினத்தன்று தலைமை வஹிக்க அவர்கள்தான் தகுதியுள்ளவர்களென்றும், தமிழ்ச் செல்வராய அவர்கள் அவைத் தலைமை வஹிப்பதே மிகப்பொருத்தமானதென்றும் விசேஷ உற்சாகத்துடன் எடுத்துரைத்தார்கள். பலத்த

கரகோஷத்திடையே ஐயங்காரவர்கள் அங்கீகரித்து தலைமை தாங்கினர்.

## வாழ்த்துப்பாக்கள் வாசித்தல்.

கம்பர் திருநாளை வாழ்த்தி அனுப்பப்பட்டிருந்த பின்வரும் பாடல்களைக் காரியதரிசி பாடினர்.

அபிநவ காளமேகம், அபிநவபிள்ளைப் பெருமாளய்யங்கார் என்று பிரசித்திபெற்ற ஸ்ரீவானமாமலைமடம் ஆஸ்தான வித்வான் ஸ்ரீ உபவே. தென்திருப்பேரை ஸ்ரீ அனந்தகிருஷ்ணய்யங்கார் ஸ்வாமி அநுக்ரஹித்த பாடல்கள்.

ஸ்ரீ திருஞானமுத்திரை துணை.

### விருத்தம்.

வாழ்த்துக்கவி.

ஏகம்பன் குண்டிகையிலிலகம்பன் சத்துருவை யின்னலோடும்
மாகம்பனென முழக்குவரகம்பன் மூவரொரு வடிவோனென்னுஞ்
சாகரநீர் பருகம்பன் சரிதசுதை தமிழுலகிற்றந்தோனான
மாகம்பன் விழா நடத்துமலிக்கேணிச் சங்கம் நிதம் வாழ்க வாழ்க.

ஏகம்பன்-கச்சிப்பரமசிவன்; குண்டிகையில் இலகு அம்பன் - அம்பு - ஜலம், பிரமன்; மாகம்பன் என - மிக நடுக்கமுள்ளவனென; வரகம்பன்-சிரேஷ்டமான பாஞ்ச சன்னியமெனும் (கம்பு) சங்குடையவன், விஷ்ணு; சாகர நீர்பருகு அம்பன் - (அம்பு - பாணம்) ஸ்ரீராமன்; 2-வது மாகம்பன்-கவிச்சக்ரவர்த்தியான கம்பன்.

### ஆசிரிய விருத்தம்.

திங்களுறுமணிமாடமெங்குந் திகழ்ந்திடுந் திருவலிக்கேணிதன்னில்
தென்கலைக்கழகமதை நன்கமைத்தேயதிற் சீராமகாதைதன்னை
க்கைப்ரவாகமென அங்கச் செயுட்செய்த கவிசக்ரவர்த்தியான
கம்பனது திருவிழாச் செய்திடுங்கேசவக் கனவானுமவையினுப்பண்
சிங்கமெனவே தலைமைகொண்டு நந்தமிழரசி சீர்மைபெறலொன்றேகினை
சீநிவாசப்பெயர்கொள் வள்ளலுஞ்செகதலத் தெருளாளரிறும் பூதுற்
இங்குமுதமென்னவே பிரசங்கமாரி பெய்யிராகவக்கார் மேகமும்
இச்சபையிலுற்றிலகு மற்றெவருமச்சுதன் இன் கருணையொடு

[வாழ்கவே

'செந்தமிழ்' உதவிப்பத்திராசிரியர்

ஸ்ரீமான் டி. கே. இராமாநுஜையங்காரவர்கள் அனுப்பிய

திருவல்லிக்கேணித் தமிழ்ச்சங்கத்துக்

## கம்பர் திருநாள் மங்கல வாழ்த்து.

தண்ணிழற் கற்பகப்புலவர் தழைத்திடப்பாற்
　　கடல் கடைந்து தலை நாள் எங்கள்
கண்ணனருளிய வமுதங்கைக்குமெனக்
　　காகுத்தன் கதையைக் கம்பன்
பண்ணமர் தீங்கவியமுதாச் செவிவாயாப்
　　புலவரெலாம் பருகத் தந்த
எண்ணரிய பெருஞ்சிறப்பார் பங்குனி யுத்திரத்
　　திருநாளின்று காண்மின். (1)

இத்திருநாளவைத்தலைமைப் பதவியையேற்
　　றருளுமென எந்த நாளும்
முத்தமிழும் நனிநிலவும் திருவல்லிக்கேணியினில்
　　முதியோர் கண்ட
மெத்து புகழ்த்தமிழ்ச்சங்கத்தார் வேண்ட
　　நாயகனுமேவும் வள்ளல்
எத்திசையும் பரவுமெழிற் சீனிவாசாரியன் சீர்
　　இயம்பப்போமோ. (2)

செந்தமிழ்க்குத் தாயகமாத்திகழ் சேது நன்னாட்டுத்
　　திருப்புல்லாணி
வந்துதித்த நான் மறையோன் மாமதுரைத்தமிழ்ச்சங்கம்
　　வளம்பெற்றோங்க
முந்து பெருநிதியமெலாம் பொழிகாளமேகம் என்றும்
　　முதுநூல் வாணர்
சிந்தையினும் செய்யுளினும் மன்னிவளர்
　　திருவுடையான் தேசுமிக்கான். (3)

இப்பெரியோன் தலைமையினில் இத்திருநாள்
　　மிகச்சிறக்க, என்றுங்கம்பன்
ஒப்பரிய கவியமுதம் உலகமெலாம் பருகிமகிழ்
　　வுறுக, ஐயா
றெப்பொழுதும் தமிழ்தழையமுயலுமியன்
　　சங்கமெலாம் இனிது வாழ்கென்
றெப்புவியும் புகல் கருணைச் செழுங்கொண்டல்
　　அடியிணைகளிறைஞ்சுவோமே, (4)

## அரச வாழ்த்து.

ஆழிபுடைசூழ் அவனியெலாந்தன் குடைக்கீழ்
ஊழிபல வாழ உவப்புடனே — வாழிபல
நூறாயிரத்தாண்டு நண்மதிசேர் மன்னன் எங்கள்
ஆறாவது ஜார்ஜராசு.

## காரியதரிசி அறிக்கை. வருட நடவடிக்கை வாசித்தல்.

சென்ற வருட நடவடிக்கையைக் காரியதரிசி வாசித்தார். அதன் முக்யாம்சங்களாவன :— 5—4—36உ கம்பர் திருநாள்; 29-3-36உ முதல் 12-4-36 வரை ஸ்ரீ ராமநவமி மஹோற்சவ கதோபந்யாசங்கள்; 10-4-36 முதல் 13-4-36 வரை ஸ்ரீ பாதுகாஸஹஸ்ர ப்ரபாவ உபந்யாசங்கள்; 25-4-36 ஸ்ரீ சங்கரர் ஜயந்தி; 26-4-36, 3-6-36 ஸ்ரீ இராமாநுஜர், நம்மாழ்வார் திருநக்ஷத்திரங்கள்; 4-6-36, 6-6-36, 23-6-36, 22-7-36, 26-7-36, திருவள்ளுவ நாயனார், திருஞானசம்பந்தர், மாணிக்கவாசகர், ஸ்ரீ ஆண்டாள், சுந்தரமூர்த்தி நாயனார் திருநாட்கள்; 6-9-36 முதல் 13-9-36 வரை ஸ்ரீஜயந்தி மஹோற்சவ உபந்யாசங்கள்; 27-9-36, 18-10-36 ஸ்ரீ வேதாந்த தேசிகன், ஸ்ரீமணவாளமாமுனிகள் திருநக்ஷத்திரங்கள், 24-10-36 சாஸ்வதி பூஜைக்கொண்டாட்டம்; 29-11-36 திருமங்கை மன்னன், திருப்பாணாழ்வார், நம்பிள்ளை தினக்கொண்டாட்டம்; 22-2-37 ஸ்ரீகுலசேகராழ்வார் திருநாள்; 29-11-36 திருவிதாங்கூர் ஆலயப்ரவேச ஸ்ரீமுக கண்டனம்; மரணானுதாபம்; இலவசத்தமிழ் வகுப்புகள்; இராயப்பேட்டையில் தமிழ் வகுப்பு; பத்திரிகைகள் வரவு; நன்றி கூறல்; வகுளமாலை; வேண்டுகோள்.

## வியாசங்களைப் படித்தல்.

பின்வரும் வியாசங்களின் சாராம்சம் எடுத்துரைக்கப்பட்டது.

1. ஆண்டான் கோயில் போர்டு ஸ்கூல் உபாத்தியாயர் ஸ்ரீமான் டி. யஸ். தண்டாயுதபாணி அய்யர் அவர்கள். "கம்பர் சரித்திர அதிசயங்கள்".

2. எருக்கூர் போர்டு ஸ்கூல் ஹெட்மாஸ்டர் ஸ்ரீமான் கி. ராமச்சந்திர ராவ் அவர்கள். "கம்பர் திருநாள்".

3. பழனி முனிசிபல் ஷராப் ஸ்ரீமான் வெ. சீனிவாசன் அவர்கள். "கம்ப நாடர்".

## கம்ப ராமாயணப்பாக்கள் பாடல்.

ஸ்ரீ உபவே. ஸ்ரீ காழிச்சீராம விண்ணகரம் கம்பராமாயணம் ஆர். சந்தானகிருஷ்ணய்யங்கார் ஸ்வாமி (சங்க உபதலைவர்) கம்ப ராமாயணப் பாடல்களிற் சிலவற்றை இன்னிசையோடு அழகாகப் பாடினார்.

## மாலையிடல்.

தலைவரவர்கட்கும் உபந்யாசகருக்கும் சங்கத்தலைவரான கேசவய்யங்கார் ஸ்வாமி பூமாலையிட்டார்.

## தலைவர் பிரசங்கம்.

அவைத்தலைவர் முன்னுரையாக அழகியதோர் சிறு பிரசங்கம் செய்தார். அதன் சாராம்சம் பின் வருமாறு:—

இச்சபை மிகவும் உயர்ந்த சபை. பல அறிஞர் குழுமி இருக்கின்றனர். மாகாணத் தலைநகரில் கம்பரைக்கொண்டாடல் மிகவும் பொருத்தமுடையது. என்னை இவ்வவைத் தலைமை பூணுமாறு கோறுவது எவ்வளவு பொருத்தமுடையதோ யான் அறியேன். பி. ஏ. வகுப்பில் முதலில் தோல்வி. மதுரைத் தமிழ்ச்சங்க ஸ்தாபகரும், பாலவநத்தம் ஜமீந்தாருமான ஸ்ரீமான் பாண்டித் துரைசாமித் தேவர் பேருதவியால் அடுத்த வருடமே தமிழ்ப்பரீக்ஷையில் தேறினேன். இவ்விதம் இங்கு தேறியவன் தமிழ்ச்சங்க விழாவில் தலைமை வஹிப்பது எவ்வளவு தகுதி என்று நீங்களே பாருங்கள். மேலும் என்னிடம் இருப்பதுபோல் குணங்கள் பலவற்றை என் பேரில் சுமத்தப்பட்டிருக்கின்றது. இங்கு கேட்க வந்தவனில் ஒருவனை தவிற வேறில்லை. மதுரைத்தமிழ்ச் சங்கத்தொடர்பு ஒன்றே இதற்கெல்லாம் காரணம். கம்பரின் கவித்திறத்தை தேவரவர்களும் அவரிடம் வரும் புலவர் குழாமும் எடுத்துச்சொல்லக் கேட்டுளேன். அதைத்தவிற கிரமமாகப் பாடங்கேட்டு அறிந்த அளவில்லை. கம்பரின் கவிதாசக்தி, காவ்யத்தின் அமைப்பு, ராஜாங்க முறை வைப்பு முதலிய பல செய்திகள் ஆழ்ந்து நோக்குவோருக்கு

நன்கு புலப்படும். என் அருமை நண்பர் ஸ்ரீ உபவே. ராகவய்யங்கார் ஸ்வாமியை உபந்யாசம் செய்யுமாறு யான் கேட்டுக்கொள்கிறேன்.

## உபந்யாசம்.

பிறகு ஸேதுஸமஸ்தான மஹாவித்வானும் அண்ணாமலை யுனிவர்சிடி தமிழ் பீடருமான பாஷாகவி சேகர ஸ்ரீ உபவே ஆர் ராகவய்யங்கார் ஸ்வாமி "கம்பர் கவித்திறம்" என்னும் விஷயம் பற்றி அரியதோர் உபந்யாசம் செய்தார். அதன் சாராம்சம் பின் வருமாறு:—

காலம் அனாதி. அது அளக்கப்படாத நீளமுடையது. ஆயினும் சந்த்ர சூரியர்களாலே அளவு படுத்தப்படுகிறது. ஜோதிஷர்கள் நாள் பேதம் நன்கு அறிவார்கள். நன்னாள், தீநாள் என்று சாமான்ய விவகாரம். பிறர் தீமை செய்த நாள் நன்னாள் என்பர் அறிஞர். "கேள் இழுக்கம் கேளாக் கெழுதகைமை வல்லார்க்கு, நாள் இழுக்கம் நட்டார் செயின்" என்கின்றார் வள்ளுவர். நண்பர் செய்த பிழையைத் தாமாகவேயன்றிப் பிறர் சொன்னாலும் மனத்தில் கொள்ளாத உரிமை அறிய வல்லவர்க்கு, அந்நண்பர் பிழை செய்வாராயின் அந்நாளே வாழ்நாள் களிற்பயன் பட்ட நாளாம்- 'இறந்த நாளன்றோ என்றும் இருந்த நாளாவதென்றான்' என்பது கம்பர். பகவத்ஸ்மரணை தினம் சுதினம். சென்ற காலத்தின் பழுதிலாத் திறம் இன்றால் தெரிகிறது. ஒரு நாளைத்தனியே சிறப்பிப்பது பண்டை முறை. இரண்டாயிரம் வருடங்கட்கு முன்னரே நாள் விழவு உண்டென்று தெரிகிறது. கல்விக்குப்போற்றும் தினம் நெடுங்கால வழக்கு. வியாச பூஜை நடந்த காலம் முதல் நாட்கொண்டாட்டம் வந்தது என்னலாம். கல்வி நாட்கொண்டாட்டமே கம்பர் கொண்டாட்டம். தமிட்கம்பநாடன் என்பது ரகுவம்சம். கம்பர் தமிழ் வடிவு. அறநிறங்கரிதோ என்றான் விபீஷணன். இவர்களோ தருமமாவார் என்ற பிரயோகமுங்காண்க. குணத்துடன் குணியைச் சேர்த்துப் பேசும் அழகு நோக்கததக்கது. தலைவர் ஸ்தானத்தை ஏற்றுள்ள ஐயங்காரும் யானும் ஒரு ஸேதுவிலிருந்து வந்தோம். அவ்விடத்தைச் சரணாகதி விளைந்த நிலம் என்பர் சம்ப்ரதாய மறிந்த சாதுக்கள். கல்வியிற் பெரிய கம்பர் கவித்திறம் கடல் போன்றது. 'ஆசைபற்றி அறையலுற்றேன்;

அன்பெனும் நறவமாந்தி மூங்கையான் பேசலுற்றான் என்ன யான் மொழியலுற்றேன்' என்றபடி கம்பர் இராமாயணம் பாடியதற்குக் காரணம் அவரது ராமபக்தியே, ஊமையனையும் பேசும்படி செய்ய வல்லது ராமபக்தி ஆதிகவி வான்மீகிராமாயணத்திற்கும் கம்பராமாயணத்துக்கும் நெடுவாசி உண்டு. கதாஸாரத்தின் அமைப்பை நன்கு கவனித்தல் வேண்டும். தசரதனைக் கூறுமிடத்துக் கம்பர் அம்மாண் நகருக்கு அரசன் அரசர்க்கரசன். அவன் செம்மாண் தனிக்கோல் உலகு ஏழினுஞ் செல்ல நின்றான். அது மாத்திரமோ இம்மாண் கதைக்கு ஓர் இறையாய இராமன் என்னும் மொய்ம்மாண் கழலோன் தரும் நல் அறமூர்த்தி அன்னான் என்பர். கதை, மாண் கதை. இதற்கு அவன் இறையாயது அவன் அதிருஷ்டம். அவனைத்தந்த நல்லறமூர்த்தி. அறமூர்த்திதான் ராமனைப் பெறலாம். ராமனைத் தமிழ் நாட்டுக்குத் தந்த நல்லறமூர்த்தி கம்பன். படி கொண்ட கீர்த்தி இராமாயணத்தைப் பாடித் தந்தவன் கம்பன். கற்பார் இராமபிரானை அல்லால் மற்றுங்கற்பரோ? தேவிற் சிறந்த திருமாற்குத் தக்க தெய்வக் கவிஞன் பாவிற் சிறந்த திருவாய் மொழிபகர் பண்டிதனே. நாவிற் சிறந்த அம்மாறற்குத் தக்க நல் நாவலவன் பூவிற் சிறந்த ஆழ்வான் கம்பநாட்டுப் புலமையனே என்பது கம்பர் தனியன். நம்மாழ்வார் அவதாரஸ்தலமான திரு நகரியில் அத்யாபககோஷ்டியில் சந்திப்பு உற்சவத்தில் இன்னும் சடகோபரந்தாதியிலுள்ள அடியிற்கண்ட பாசுரத்தை ஸேவித்து சாற்றுமறை செய்துவருகிறார்கள்.

> "அந்தணர்க்கோ வல்லருந்தவர்க்கோவன்றி யோகியராய்
> வந்தவர்க்கோ மறவாதியர்க்கோ மகரக்குழை சேர்
> சுந்தரத் தோளனுக்கோவவன் ஜொண்டர் கட்கோ சுடர்தோய்
> சந்தனச் சோலைக்குருகைப்பிரான் வந்து சந்தித்ததே"

சிறந்த வைதிக மார்க்கத்தைப் பின் பற்றியே கம்பர் ராமாயணம் பாடினார். எம்பெருமான் பரத்வஸௌலப்யங்களை விரிவாகப் பேசுகிறார். அவதார ரஹஸ்யத்தை விராதன்ஸ்துதியாக வைத்துக் கம்பர்

> "புறங்காணவகங் காணப்போது முகத்தினருணைக்கம்
> இறங்காத தாமரைக்கணைம் பெருமா அனியம் புதியால்
> அறங்காத்தற்குனக் கொருவராரு மொருதுணை யின்றிக்
> கறங்காகு மெனத்திரிய நீயேயோ கடவாய்தான்"

என்று பரத்வஸௌலப்யங்கள் நன்கு புலப்படுமாறு நன்றாகப் பேசுகிறார்.

பட்டர் அஷ்டச்லோகியில் சொன்னதாத்பர்யத்தை 'உலகம் யாவையும்' என்ற பாட்டில் காணலாம். மேலும் இதில்திருமந்த்ரார்த்தத்தை விளக்குகிறார். 'உலகம் * * * தலைவர்' என்றதால் அகாரார்த்தத்தையும், 'அன்னவர்க்கே' இதிலுள்ளஏகாரத்தால்உகாரார்த்தத்தையும், 'சரணாங்களே' என்றதால் மகாரார்த்தத்தையும் வெளியிடுகிறார். மேலும் திருப்பாற்கடலில் யோக நித்திரை செய்வதைக் குறித்து எவ்வளவு அழகாக அர்த்தபுஷ்டியுடன் பேசுகிறார் பாருங்கள். இதனிலும் வேதவேதாந்தார்த்தத்தை எங்ஙனம்விளக்க முடியும்?

"பொருவரிய சமயங்கள் புகல்கின்ற புத்தேளிர்
இருவினையுமுடையார் போலருந்தவமின்றியற்றவார்
திருவுரையுமணி மார்ப நினைக்கென்னை செயற்பால
ஒரு வினையுமில்லார் போலுறங்குதி யாலுறங்காதாய்."

இவரது மனோபாவம் உத்தமமானது. மதப்பற்று அதிகம். ஆயினும் இதர மதங்களைப்பற்றிப் பேசுகிறபோது அமைதியாகக் கூறுகிறார். பல் பெருஞ்சமயஞ் சொல்லும் பொருளும் போற்பரந்ததன்றே என்பதை நோக்குக. மேலும் சீதைக்கு ஆபரணமிட்டதைக் குறித்துப் பேசுங்கால் 'பல் இயல் நெறியிற் பார்க்கும் பரம் பொருள் என்ன யார்க்கும் இல்லை உண்டு என்ன நின்ற இடையினுக்கு இடுக்கண் செய்தார்' என்று கூறுவதையும் காண்க. இங்கு ஒன்று பாருங்கள். இராமன் அநுமானைத்தனியே அழைத்து சீதை இலக்கண முரைத்தகாலத்து இடைத்திறம் இசைக்கின்றதைக் கவனியுங்கள். "சட்டகந்தன்னை நோக்கி யாரையுஞ்சமைக்கத்தக்காள், இட்டிடையிருக்குந் தன்மையியம்பக் கேட்டுணர்தி யென்னின், கட்டுரைத்துவமை காட்டக்கட்பொறிகதுவாகையிற், ஏட்டவெற்குணரலா மற்றுண்டெனுஞ் சொல்லுமில்லை." சீதையைத் தொட்ட எற்கே முடியும் என்று சீதையின் சிறந்த கற்பினையுங் கூறாது கூறுதல் காண்க. அவளது நடைத்திறங் கூறும் போது

"பூவருமழலையன்னம் புனைமடப்பிடி யென்றின்ன
தேவருமருளத்தக்க செலவின வெனவுக்தேறேன்
பாவருங்கிழமைத் தொன்மைப் பருணிதர் தொடுத்தபத்தி
நாவருங்கிளவிச் செல்வி நடைவருநடையனல்லோய்"

பிராட்டியின்நடை செய்யுள்நடை கவிநடைக்கு உவமை கூறிய ஒன்று உலகம் பெறும்.

சீதாபிராட்டி மணமண்டபத்தை நண்ண வரலோடும் நடந்ததைக் கூறுகிறார் கம்பர்.

"மைவளம் நவிற்றும்மொழி நண்ணவரலோடும்
வையம் நுகர் கொற்றவனும் மாதவரும் அல்லார்
கைகள் தலைபுக்கன கருத்துளது மெல்லாம்
தெய்வம் என உற்ற உடல் சிந்தை வசமன்றே"

இங்ஙனம் ஆடவர் மத்தியில் வந்த நங்கையை அணங்காக வருணித்தவர் இதற்கு முன் ஒருவருமில்லை. கிள்ளைக்கு எல்லாம் அம்சொற்கள் அருளினள் அழகை மாந்தி தம்சொற்கள் குழறித்தகைதடுமாறி நின்றார். இத்தடுமாற்றத்துக்குக் கம்பர் கூறும் காரணத்தைக் கவனியுங்கள். மஞ்சர்க்கும் மாதரார்க்கும் மனம் என்பது ஒன்றே அன்றோ என்கிறார்.

கம்பரது கவியிலுள்ள ஓர் அதிசயம் பாருங்கள். சாதாரண பதங்களைப் பிரயோகித்து மிகவும் சூக்ஷ்மார்த்தத்தைத் தெரிவிக்கிறார். இது சற்று ஆழ்ந்து நோக்குவாருக்கே புலப்படும். 'உறங்கும்' என்ற பதத்தை எவ்வளவு அழகாக உபயோகிக்கிறார் பாருங்கள்.

"நீரிடையுறங்குஞ் சங்க நிழலிடை யுறங்குமேதி
தாரிடையுறங்கும்வண்டு தாமரையுறங்கு மேதி
தூரிடையுறங்குமாமை துறையிடை யுறங்குமிப்பி
போரிடையுறங்கு மன்னம் பொழிலிடையுறங்குந்தோகை"

என்கிறார். நீரிடை வீழ்ந்து அலைக்காது மரநிழலில் எருமைகள் இன்புறுவதால் சங்கங்கள் நீரில் உறங்கும். இம்மாதிரி இரட்டையைக் கூறி ஒன்றற் கொன்றுள்ள காரிய விசேஷத்தால் உறக்கம் . எய்தி அநுபவித்தலைக் குறிக்கிறார். இங்ஙனம் அறிந்து கொள்ள வேண்டும் என்றே இதற்கு முற்பாட்டில் 'தாமரைப்படுவ வண்டுந்தகைவருந்திருவும்' என்று வைத்துப் பாடியுள்ளார். இங்ஙனமே அவர் ஆங்காங்கு பொதிய வைக்கும் திறவுகோலைக் கொண்டு அர்த்தம் தெளியலாம். மற்றும் கவனியுங்கள். அன்னங்கள் தங்கள் இளஞ்குஞ்சுகளை தாமரை மலர்களாகிய சயநத்தில் கிடத்திவிட்டு நடைகற்கச் சென்றன. கன்றுக்காக மேய வந்த எருமைகள் சேற்றில் கால்கள் சிக்கிக் கொள்ள ஊரில்விட்டு வந்த

கன்றை நினைத்துக் கதறின. அக்கதறலால் சோர்ந்த பாலை இவ்வன்ன மழலைப்பிள்ளைகள் உண்டு துயில் கொள்கின்றன. பச்சைத்தவளைகள் தாராட்டித் தாலாட்டுகின்றன. இங்ஙனம் வெவ்வேறினத்தவர் அந்நியோந்நியத்துடன் வாழும் மருதவளப்பத்தைக் கம்பர் சித்திரித்துக் காட்டுவது மிகவும் அழகுடைத்தே.

"சேலுண்ட வொண்கணாரிற் றிரிகின்ற செங்காலன்னம்
மாலுண்ட நளினப்பள்ளி வளர்த்திய மழலைப்பிள்ளை
காலுண்ட சேற்று மேதி கன்றுள்ளிக் கனைப்பச் சோர்ந்த
பாலுண்டு துயிலப்பச்சைத் தேரை தாராட்டும் பண்ணை"

என்பது கம்பர் கவி. இப்பாட்டு சிந்தாமணிப் பாட்டையும் வென்று விட்டது.

பெரிய பொருளுடன் சேர்த்துப் பார்டும் வன்மையும் கம்பரிடம் காணலாம். அவதாரத்தை அடக்கி பெருமை சிறுமைகளையும் ஒன்றிப்பேசுவார்

"நீலநிறத்து நெடுந்தகை வந்தோர், ஆலமர் வித்தினருங் குறளானான்" என்றதைக் கவனிக்க.

இக்கவி நாகரிக சிகாமணி. எக்காலத்தில் இராமனைப் புல்லினதாகவும் சீதையைக் கருணையாற்றமுதினதாகும் கூறும் நயம் காண்க.

இராமபக்தி மேலிட்டு தன் மதத்தையும் ஆங்காங்கு வெளிப்படுத்துவார். "தோள் கண்டார் தோளே கண்டார்" என்ற பாசுரத்தில் வாள் கொண்ட கண்ணார் யாரே வடிவினை முடியக்கண்டார்? என்று அவர்களே காணுத போது தான் என் சொல்ல வேணும் என்று கூறுவது போலாம். 'ஊழ் கொண்ட சமயத் தன்னான் உருவு கண்டாரை யொத்தார்' என்றதிலுள்ள 'அன்னான்' என்பதால் தம்முடைய கடவுளான இராமனைக் குறிக்கின்றார்.

ஸ்திரீ புருஷர்களின் நற்றன்மையை நன்கு விளக்குகிறார். மாருதி சானகியிடம் 'அடியன்றேன் ஏறு கடிதென்று தொழுது இன்னடி பணிந்தான்.' அதற்கு கற்பினுக்கணியாய சீதை 'ஆறுமைம்பொறி நின்னையும் ஆணெனக் கூறும் இவ்வுருத் தீண்டுதல் கூடுமோ' என்றார். ஸ்வபாவமாக ஆறுதலை ஆறுமைம் பொறி என்றார். பெண்கள் பால் வைத்த நேயம் பிழைப்பரோ சிறியோர் பெற்றால் என்ற விடத் சிறியோர்-காகமூர்த்து, கீழோர். 'பெற்றால்

என்பதுவ்வைத்த அன்பை அவர்களாலும் பெற்றுவிட்டால் என்' வாகும். அது வியர்த்தபதமல்ல. பிழைப்பரோ தப்புவார்களா என்றபடி. பெற்று ஸ்வபாவத்தில் காமுகனாகவுமிருந்து விட்டால் கேட்கவே வேண்டாம். 'தன்னையுந் துறக்கும் தன்மை காமத்தே தங்கிற்றன்றே' என்பர் வேறிடத்தும். சந்யாசிக்குத் தன்னைத் துறத்தல் தன்னுயிரினிடத்தும் பற்றின்றியிருத்தல், காமங்கொண்ட மகட்குத் தன்னைத் துறத்தல் தானென்று சொல்லுமாறு மகடூஉக் குணங்களுட் சிறந்த நாணத்தைத் துறத்தல். ஒருத்தி கலவி நிகழு மாறு ஆடையையும் மேகலையையும் கழற்றி எறிந்து நாணமின்றிக் கிடந்தாளென்பதை உன்னருந்துறவு பூண்ட உணர்வுடை ஒருவனே போல் நன்னுதலொருத்தி தன்பாலகத்துளநாணும் நீத்தாள் என்கிறார். தன்னையுந்துறக்குந்தன்மை நிவர்த்திமார்க்கம். காளிதாசனிடம் எடுத்து அதிகரித்துப் போகிறார் கம்பர்.

ராஜநீதத்தைப் பற்றி விரிவாகப் பேசுகிறார் கம்பர். ஒரு கோடி ஜனத்தைஒருவன்ஆள்வது எங்ஙனம் என்றவினாவிற்கு உத்தரங்கூறுகின்றார். "வேண்டுந்திறத்தாரும் வேண்டா வரசாட்சி, பூண்டிவ் வுலகுக்கிடர் கெடுத்த புல்லனேன்," "மல்லுயிர்க்கு நல்குரிமை மண்பார நான் சுமக்க" என்றமை காண்க. "முறையும் வாழ்மையும் முயலு நீதியும், அறையுமேன்மை யோடறனுமாதியாம், துறையும் பாவையுஞ் சுருதி நூல் விடா, இறைவரேவலாவியைவ காண்டியால்" என்பதால் அரசன் காரியஞ் செய்து கொண்டே ஏவுவான் என்பதும் அரசன் உறங்குமாயினும் அரசனே என்பதும் பெறப்படும்.

இவர் பாடலில் தொகை விளக்கத் தொகுதி உய்த்து உணாற்பாலது. தாதுகு சோலை தோறும் என்ற பாடலில் சோலை, காடு, பொய்கை, மணற்றடம், பூகவனம், வயல்கள், உடம்பு என்ற ஏழு இடங்களைக் குறித்தமையால் சப்தசரீரங்களை வெளிப்படுத்துகின்றது. இது போல 'முல்லையைக் குறிஞ்சியாக்கி' என்ற பாட்டில் 'செல்லுறு கதியிற் செல்லும் வினையெனச் சென்ற தன்றே' என்று நால்வகைக் கதியை உணரவைத்தார். தேவகதி மக்கட்கதி, விலங்குக்கதி, தாவரகதி என்பன நாற்கதிகள்.

நிகண்டன்னியிலே ஓர்த்த முள்ள பல பதங்களை ஒரு பாட்டில் வைப்பார். "ஈயந்தே கடந்தான" என்ற செய்யுளில் கடல், அளக்கர், வேலை, பௌவம் என்ற பதங்களையும், "ஆறுபாடரவம்

என்ற பாடலில் அரவம், அமலை, ஓசை, ஓதை, தமரம், துழனி, என்ற பதங்களையும் உபயோகித்த நயங்கண்டு களிக்க. தசரதன் சாஸ்த்ர வச்யனாயிருந்தான் என்று போற்றுகிறார்.

கல்வியிற் பெரிய கம்பன் கவித்திறம் எவ்வாற்றானும் பரிபூர்ணமாக முற்றும் விளக்க முடியாதது. ஓதியோதி உணருந்தோறும் உணர்ச்சி உதவும். இச்சமயம் கம்பர் திருநாளிற் கலந்து கொள்ள அம்யம் அமைத்த இச்சங்கத்தார்க்கு என்நன்றி என்றும் உரியதாகுக.

## தலைவர் முடிவுரை

தலைவர் முடிவுரையாகப் பேசியதின் சுருக்கம் வருமாறு:—

வடமொழியும் தென்மொழியும் நன்கு பயின்றோரே கம்பர் கவித்திறம் அறிய வல்லார்; 'செவ்விய மதுரஞ்சேர்ந்த நற்பொருளிற் சீறிய கூறிய தீஞ்சொல்வவ்விய கவிஞரனைவரும் வடநூன் முனிவரும்' என்று வருவதை நோக்குக. சூர்ப்பணகைப்படலத்தில் கம்பர் கவித்திறம் காண்க. 'தையல் வருமென்னக் கோமகனும் அத்திசை குறித்தனன் விழித்தான்! 'தூயவன் பணியா முன்னம் சொல்லுவாள் சோர்விலாள்.' அதனால் அபஜயமடைகிறாள். இலக்குவன் சினந்தணியாமையால் மீண்டும் அவன் மனத்திற் பதியுமாறு சினங் கொள்ளல்தகாது என்று "ஆன்றான் பகர்வான்" என்ற பாட்டில் தம்பியைப் போர் தொலைத்தோ சான்றோர் புகழுந்தவத்தாதையை வாகை கொண்டோ, ஈன்றாளை வென்றோ இனி இக்கதம் தீர்வதென்றான் என்ற அளவிலே இலக்குவன் கோபம் ஒழிந்தான் என்பது எவ்வளவு அழகுபட நிற்கின்றது பாருங்கள். "மெய்ம்மையின் வேலி போல்வான்" என்பது எத்துணைச் சிறப்புடையதென்று கவனிக்க. 'வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும், தீமையிலாத சொலல்' என்றும்' "பொய்ம்மையும் வாய்மை இடத்த புரைதீர்ந்தநன்மை பயக்கும் எனின்" என்றும் கூறிய குறட்பாக்களின் கருத்தை நன்கு அமைத்தமை காண்க. "அறந்தலை நிறுத்தி" என்ற பாசுரத்தில் அவதார ரஹஸ்யார்த்தத்தை நன்கு விளக்குகிறார். அடிக்கடி பண்டிதர்களைக் கொண்டு புலவர் திருநாட் கொண்டாட்டம் நடத்துவது மிக நன்மை உண்டாக்கும். சங்கத்தில் தமிழ் வகுப்புகள் நடத்தப்பட்டு வருவது மிகவும் போற்றத்தக்கதே. இம்மாதிரியான ஒழுங்கான கூட்டத்தை இதுகாறும் பார்த்ததில்லை. அடைவுடன் அவை

யோர் கேட்டுக் கொண்டிருந்தது அளவிலா ஆனந்தம் கொடுத்து விட்டது.

## வந்தனோபசாரம்

இறுதியில் சங்கக்காரியதரிசி வந்தனோபசாரம் அளிக்கையில் பேசியதாவது:— பங்குனி உத்திரம் சிறந்ததோர் தினம். பங்குனி உத்திரத்தில் கண்ணிய அரங்கர் முன்னே கவிச்சக்ரவர்த்தியாய கம்பர் தாமியற்றிய இராமாயணம் அரங்கேற்றப்பட்டது. பார்வதி பரிணயம் நடந்ததும் இத்தினம் என்பர். ஸ்ரீபாஷ்யம் கத்யம் அருளிச் செய்ததும் இந்நன்னாளிலே. சீதா விவாஹம் இத்தினத்தில் நடந்தது. இன்று வெள்ளிக்கிழமை. ஸ்ரீபார்த்தஸாரதி ஸ்வாமி பிரம்மோற்சவத்தில் இன்று காலை நாச்சியார் திருக்கோலத்துடன் இவட்டம் எழுந்தருளி அநுக்ரஹித்துள்ளார். இது சிங்கப்பிரான் தெருவில் அமைந்தது அவரது இன்னருளைப்பெற்ற தென்பதற்கு அறிகுறி. இக்கொட்டகையில் இத்திருநாளை நடத்த உதவிய 'பட்டண்ணு' என்ற வெங்கடாசார்ஸ்வாமியின் நன்றிஎன்றும் பாராட்டற்குரியது. எப்பொழுதும் போல் அன்னார் இம்மாதிரி நல்குமாறு ஆண்டவன் அருள்புரிவாராக. செந்தமிழின் செவிலித்தாய்போன்று பலவருடங்களாக சிறந்த முறையில் தளராத தொண்டாற்றி வரும் டாக்டர் சாமிநாதையரவர்கட்குநாம் என்னகைம்மாறியற்ற முடியும்? தேகசிரமத்தை எவ்வளவும் கருதாது கூட்டம் தொடங்கியது முதல் இருந்து அநுக்ரஹித்த அம்முத்தமிழ் முதல்வன் முக்கனி போல் வானை பெருந்தகையாளர் சிறப்புடன் பல்லாண்டுபல்லாண்டாய் எழுந்தருளியிருந்து மேன்மேலும் நற்றொண்டியற்ற நாரணன் நலமளிப்பானாக. இவண் வந்துள்ள பிரபலநீதிபதிகட்கும் பண்டிதசிகாமணிகட்கும், மதுரையிலிருந்து கிருபையுடன் வந்து அவைத்தலைமை தாங்கிய ஸ்ரீநிவாசய்யங்கார்ஸ்வாமிக்கும் அபிநவ கம்பரான ராகவய்யங்கார் ஸ்வாமிக்கும், அவையிலுள்ள ஏனையோர்க்கும் சங்கத்தின் சார்பாக அன்பார்ந்த வந்தனம் அளிக்கின்றேன்.

(இரவு 7-மணிக்கு கொண்டாட்டம் இனிது முடிந்தது.)

## வேறு உபந்யாசங்கள்

ஷை ராகவய்யங்கார் ஸ்வாமி மார்ச் 28, 29, 30, 31உகளில் முறையே திருவள்ளுவர் மதம், க்ருஷ்ணாவதாரம், இராமாவதார

மும், நரசிம்ஹாவதாரமும், விபீஷணசரணாகதினனும் விஷயங்களைப் பற்றி வேத வேதாந்த வர்த்தினியின் ஆதரவில் தவன உத்சவபங்களாவில் உபந்யாசம் செய்தார். அச்சபையார் இருநூறு ரூபா சம்மானம் செய்தனர்.

## சம்மானம்.

சங்கத்தின் சார்பாக ஸ்ரீமான்கள் யஸ். வரதாச்சாரியார், கே. யஸ். கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார், வி. நரசிம்மாச்சாரியார், வி. ராஜகோபாலாச்சாரியார், யம். சுதர்சனமய்யங்கார், டி. ஜி. ஆராவமுதய்யங்கார், ஆர். கேசவய்யங்கார், யஸ். வெங்கடேசய்யங்கார், அப்பா அண்டு கம்பனியார் என்றிவர்கள் கொடுத்த நூற்றுமுப்பது ரூபாயை சங்கஉபதலைவரான ஸ்ரீமான் வி. நரஸிம்மாச்சாரியாரவர்களால் 31—3—37உ நைச்யாநுஸந்தானமான ஸ்துதியுடன் ஸ்ரீ உபவே ஆர். ராகவய்யங்கார் ஸ்வாமிக்கு சமர்ப்பிக்கப்பட்டது. பொங்கும் மங்களம் எங்குந்தங்குக.

ப. ரெ. திருமலை ஐயங்கார், காரியதரிசி.

---

# தனிப்பாடல்.

(1) "உத்திரத்துக்கோர் நாளு ரோகிணிக்குப் பத்தாநாள்
சித்திரைக்கு நேரே சிறந்த நாள் — எத்திசையும்
காராரும் பூஞ்சோலைக் கண்ணபுரம் வாழ்சவுரி
நாராயணன் பிறந்த நாள்."

(உத்திரத்திற்கடுத்ததும், உரோகிணிக்குப் பத்தாவதும், சித்திரைக்கு முற்பட்டதுமாகிய நாள் திருக்கண்ணபுரம் சவுரி நாராயணப்பெருமாள் திருநக்ஷத்திரமான அஸ்தம்.)

(2) "மெச்சுபுகழ் வேங்கடவா வெண்பாவிற்பாதியிலேன்
இச்சையிலுன் சென்மமெடுக்கவா — மச்சாகூர்
மாகோலா சிங்காவாமா ராமா ராமா ரா
மாகோபாலாமாவா வாய்."

(சென்மம்-அவதாரம்; மச்சம்-மீன்; கூர்மம்-ஆமை; கோலம்-வராஹம்; சிங்கம்-நரசிங்கம்; வாமன்-வாமநன்; ராமா ராமா ராமா-பரசுராமன், ஸ்ரீராமன், பலராமன்; கோபாலன்-கண்ணன், மா-கற்கி.)

தமிழன்பன்.

# எதிராசரந்தாதி.

பூமான் பிறந்து வேலை புவிபடைத்த
கோமான் பிறந்து சிறந்தது நான்மறை கூடற்சங்கம்
நாமான் பிறந்து சிறந்தது பண்டெதிராசனென்னுஞ்
சீமான் பிறந்து சரணாகதியுஞ் சிறந்ததுவே. (1)

(பூமான்-சீதேவி; புவிபடைத்த கோமான்-பிரமன்; கூடல்-மதுரை நாமான்-சரஸ்வதி; எதிராசன்-உடையவர்; வேலை-சமுத்திரம்.)

சிறந்தது செல்வஞ் சிறிவாதது கலி சில் சமய
மறந்தது மாதவன் பேர்வாழ்த்த வைகுந்த மன்னுமுனி
திறந்தது வாசல் திறவா நரகந்தெரிந்த வையம்,
பிறந்தது பூதூர்ப்பிறவா முனிவன் பிறந்த பின்னே. (2)

(செல்வம்-வைஷ்ணவஸ்ரீ; கலி-பாவம்; சமயம்-மதம்; மாதவன்-திருமால்; ஐயம்-சந்தேகம்; பிறவா முனிவன்-கருமவசத்தாற் பிறவாது பிறப்பிலிபோல் அவதரித்த எம்பெருமானார்,)

பின்னே தொடரும் பிறவிப் பெரும்பிணி பேர்க்கும் வண்ணம்
இன்னே யிதற்கு மருந்தறிந்தேனிந்த மேதினியிற்
றன்னே ரொருவரொவ்வா வெதிராசன் சரணமென்று
சொன்னே னறிந்திலையோ மனமே யிந்தத்துக்கம் விட்டே. (3)

(பேர்க்கும்-போக்கும்; இன்னே-இப்பொழுதே; மேதினி-பூமி; ஒவ்வா-ஒப்பாகாத.)

விட்டது தீவினை மாண்டது கோவமெய்ஞ்ஞான நெஞ்சிற்
பட்டதுவேறு பரவச்சந் தீர்ந்தது பாவமெல்லாம்
கெட்டது வீடு தகுமென்று கேசவன்றாள் தலைமேல்
இட்டது வெங்களி ராமானுச னென்றிருப்பவர்க்கே. (4)

(வேறு பரவச்சம்-மாலையன்றி இதரபர தேவதையுண்டோ வென்ற பயம்; வீடு-மோக்ஷம்; தகும்-தக்கது; தாள்-திருவடி; மாண்டது-அழிந்தது; தரும்-பாடபேதம்.)

இருக்கின் பொருளு மறிவின் பொருளு மெழுத்தெட்டினால்
உருக்கும் பொருளு முணர்வின் பொருளு மொன்றாக வெல்லாஞ்
சருக்கும் பொருளுந் துணிவின் பொருளுந் துணிந்த பின்பு
செருக்கும் பொருளு மெதிராசராசன் றெரித்தனனே. (5)

(இருக்கு-வேதங்கள்; எழுத்தெட்டு-திருவஷ்டாக்ஷரம்; தெரித்தனன்-உணர்த்தினன்.)

(தொடரும்.)

அழகிய மணவாள தாசர்.

ஸ்ரீ:

# திருவல்லிக்கேணித் தமிழ்ச் சங்கம்.

**சங்க வித்வான்கள்.**

1. ஸ்ரீ உபவே பண்டித பூஷணம் தில்லையம்பூர் சக்ரவர்த்தி ஆசார்ய ஸ்வாமி.
2. ஸேது ஸமஸ்தான வித்வான் ஸ்ரீ உபவே. ஆர். ராகவய்யங்கார் ஸ்வாமி.
3. ஸ்ரீ உபவே மு. ராகவய்யங்கார் ஸ்வாமி.
4. ஸ்ரீ உபவே. ஸ்ரீரங்கம் சடகோபாசாரிய ஸ்வாமி (மாம்பலம்):

**தலைவர்** ... ஸ்ரீமான் ஆர். கேசவய்யங்காரவர்கள்.

**உப தலைவர்கள்.** ...

1. ஸ்ரீமான் வி நரஸிம்மாச்சாரியாரவர்கள்.
2. ,, ஆர். சந்தானகிருஷ்ணய்யங்காரவர்கள்.
3. ,, யஸ். லக்ஷ்மி நரஸிம்மாச்சாரியாரவர்கள்.

**காரியதரிசியும், பொக்கிஷதாரரும்.** ஸ்ரீமான் ப. ரெ. திருமலை ஐயங்கார்.

**கமிட்டி மெம்பர்கள்.**

1. ஸ்ரீமான் ஆர். இராமசாமி ஐயங்காரவர்கள்
2. ,, யஸ். கிருஷ்ணஸாமி ஐயங்காரவர்கள்.
3. ,, டி. ஆர். ஸ்ரீநிவாஸய்யங்காரவர்கள்.
4. ,, எ. வெங்கடாச்சாரியாரவர்கள்.
5. ,, வி. ஷண்முகசுந்தர முதலியாரவர்கள்.
6. ,, யஸ். குமாரசாமி செட்டியாரவர்கள்.
7. ,, இ. கே. சபாபதி முதலியாரவர்கள்.

**காரியாலயம்** ... 42-எ. வெங்கடரங்கம் பிள்ளை தெரு, திருவல்லிக்கேணி.

**முக்கிய நோக்கங்கள்.**

1. தமிழைப் பரவச் செய்தல்.
2. வாரந்தோறும் திருக்குறள் கம்பராமாயணம் முதலிய தமிழ் வகுப்புகள் இலவசமாக நடத்தல்.
3. தமிழ்ப் பெரியார் ஜன்ம தினங்களைக் கொண்டாடல்.
4. தமிழ் வித்வான் பரீக்ஷைக்குப் போகுமவர்களுக்கு வேண்டிய ஒத்தாசை செய்தல்.
5. சங்கவெளியீடாக ஒருபத்திரிகை நடத்தல்.
6. பிராசீனசம்ப்ரதாய முறைகளைக் காப்பாற்றத்தக்க ஏற்பாடு செய்தல்.
7. புலவர்களைப் போற்றுதல்.
8. திரு நாட்களை நன்கு கொண்டாடல்.

ப. ரெ. திருமலை ஐயங்கார்,
காரியதரிசி.

Printed at the Lakshmi Kantha Press, 405, High Road, Triplicane
published by P. R. Tirumalai Ayyangar at 42-A, Venkatrangam Pillai St., Triplicane, Madras.